2. தகவல் கோரல்

(அ) கைலாஷ், மானசரோவர் பகுதிக்கு யாத்திரைக்காக நேபாளம் சென்று கடும் மழை மற்றும் குளிரில் சிக்கியுள்ள தமிழர்களை மீட்க நடவடிக்கை எடுத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கைலாய யாத்திரைக்காக நேபாளம் சென்றிருக்கக்கூடிய ஏறக்குறைய 1,300–க்கும் மேற்பட்ட இந்தியர்கள் அங்கு ஏற்பட்ட கன மழையின் காரணமாக, கடும் குளிரிலே சிக்கி தவித்துக் கொண்டிருக்கிறார்கள் என்ற அதிர்ச்சியான செய்தி தொடர்ந்து பத்திரிகைகளில், ஊடகங்களில் வந்து கொண்டிருக்கிறது. அதில் தமிழ்நாட்டைச் சேர்ந்திருக்கக்கூடியவர்கள் 300 பேர் என்ற அந்தச் செய்தியும் வந்திருக்கிறது. அதோடு அந்தப் புனித யாத்திரை சென்ற ஆண்டிப்பட்டியைச் சேர்ந்த ஓய்வு பெற்ற தலைமையாசிரியர் திரு. ராமச்சந்திரன் அவர்கள் கடும் குளிரால் ஏற்பட்ட மூச்சுத் திணறலால் இறந்து போயிருக்கிறார்.*

அதுமட்டுமல்ல, இந்த அவையிலே ஏற்கெனவே சட்டமன்ற உறுப்பினராக இருந்த முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் காயத்ரி தேவி அவர்கள் வெளியிட்ட பேட்டி ஒன்று இன்றைக்கு பத்திரிகையில் வெளிவந்திருக்கின்றது. "100 பேர் மட்டுமே இருக்க வேண்டிய இடத்தில் 400–க்கும் மேற்பட்ட மக்கள் நெருக்கடியான சூழ்நிலையில் பல்வேறு கொடுமைகளை அனுபவித்துக் கொண்டிருக்கக்கூடிய நிலையில் நாங்கள் இருந்து கொண்டிருக்கிறோம். இன்னும் பலர் இந்த இடத்திற்கு வருவதாக எங்களுக்குச் செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன" என்றும் ஒரு பேட்டியில் அவர் எடுத்துச் சொல்லியிருக்கின்றார். அங்கு மருத்துவ உதவிகள் இல்லாத சூழ்நிலை இருக்கிறது. உணவு இல்லாத சூழ்நிலையும் இருக்கிறது. அதைவிட முக்கியமாக ஆக்ஸிஜன் குறைவாக இருக்கக்கூடிய நிலையும் அங்கு இருக்கிறது. ஆக, அந்தக் கொடுமைகளை உணர்ந்து, இந்தப் பிரச்சினைகளில் சிக்கித் தவித்துக் கொண்டிருக்கக்கூடியவர்களை மீட்கின்ற பணிகளிலே தமிழக அரசும் ஈடுபட வேண்டும். ஏற்கெனவே அப்படி ஈடுபட்டிருந்தால், என்னென்ன பணிகளில் இந்த அரசு ஈடுபட்டிருக்கிறது என்பதை இந்த அவையில் தெரிவிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

2018 ஜூலை 4] [திரு. மு.க. ஸ்டாலின்]

முற்பகல் 11–15

அதுமட்டுமல்லாமல், உடனடியாக தமிழகத்திலிருந்து மாண்புமிகு அமைச்சர் ஒருவரையோ அல்லது ஓர் உயர் அதிகாரியையோ புதுடெல்லிக்கு அனுப்பி வைத்து, மத்திய அரசு அதிகாரிகளோடு அவ்வப்போது தொடர்பு வைத்துக்கொண்டு, கைலாஷ் யாத்திரையில் சிக்கித் தவித்துக் கொண்டிருக்கின்ற தமிழ்நாட்டைச் சார்ந்திருக்கக்கூடியவர்களை உடனடியாக மீட்கின்ற பணிகளிலே இந்த அரசு ஈடுபட வேண்டும். புனித யாத்திரையின்போது இறந்த ஆசிரியர் திரு. ராமச்சந்திரனுடைய உடலை ஆண்டிப்பட்டிக்குக் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகளையும் உடனடியாக எடுக்க வேண்டும் என்றும் நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. பிரின்ஸ், இதே பொருள் குறித்துதான் பேசப் போகிறீர்களா? (குறுக்கீடு) சரி, பேசுங்கள்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேபாளம், மானசரோவர் புனித யாத்திரைக்குச் சென்றிருக்கக்கூடியவர்கள் மத்திய அரசின் அனுமதியுடன்தான் சென்றிருக்கிறார்கள். ஆபத்தான நிலையில் அவர்கள் இருக்கின்றபோது அவர்களை மீட்க வேண்டிய பொறுப்பு மத்திய அரசுக்கு உண்டு. நம்முடைய முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஒருவரும் இதில் சிக்கியிருக்கிறார். "எங்களுக்குத் தகுந்த பாதுகாப்பு தரவில்லை, எங்களைப் பார்ப்பதற்கு வழிகளில்லை" என்று அவர்கள் பேட்டி கொடுத்திருக்கிறார்கள். இதுபோன்ற அதிர்ச்சி தரும் செய்திகள் இரண்டு, மூன்று நாட்களாக வந்து கொண்டிருக்கின்றன. அவர்களை தனி விமானம்மூலம் மீட்டுக் கொண்டுவர ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்று தங்கள் வாயிலாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை நான் வேண்டிக்கொள்கிறேன். நம்முடைய தமிழக மக்களை மீட்க வேண்டிய பொறுப்பு அரசுக்கு இருக்கிறது. கிட்டத்தட்ட 300–க்கும் அதிகமான தமிழக மக்கள் அங்கு இருக்கிறார்கள். ஆகவே, எவ்வளவு பணம் செலவானாலும், மத்திய அரசுடன் தொடர்பு கொண்டு, நம்முடைய அரசு அதிகாரிகளை depute செய்து, உடனடியாக அவர்களைப் பாதுகாப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இமயமலையில் அமைந்துள்ள கைலாஷ், மானசரோவர் பகுதிகளுக்கு ஆண்டுதோறும் ஜூன் முதல் செப்டம்பர் வரையிலான மாதங்களில் நாடு முழுவதிலிருந்தும் பக்தர்கள் யாத்திரை செல்கின்றனர். இந்தியாவிலிருந்து புனித யாத்திரை சென்றவர்களில், அங்கு நிலவும் மோசமான பருவநிலை காரணமாக 629 பேர் சிமிகோட் என்ற இடத்திலும், 451 பேர் ஹில்சா என்ற இடத்திலும், மேலும் 500 பேர் சீனாவின் திபெத் எல்லையிலும் சிக்கியுள்ளதாக ஊடகங்களில் தகவல் வெளியானவுடன், தமிழ்நாட்டைச் சேர்ந்த யாத்ரீகர்கள் அங்கு உள்ளனரா என்று கேட்டறிந்து, நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டேன். இதனைத் தொடர்ந்து, தமிழ்நாட்டிலிருந்து புனித யாத்திரை சென்றவர்களின் நிலை குறித்து தமிழ்நாடு அரசு அதிகாரிகள், இந்திய வெளியுறவுத் துறை அமைச்சகம் மற்றும் நேபாளத்தில் அமைந்துள்ள இந்திய தூதரகம் ஆகியவற்றோடு தொடர்பு கொண்டு, விவரங்களைக் கேட்டறிந்தனர்.*

சென்னையிலிருந்து சென்ற 19 பேர் கொண்ட குழுவினர் நேபாளத்தில் சிமிகோட் பகுதியில் இருப்பதாகவும், அவர்களின் உடல்நிலை சீராக உள்ளதாகவும் தகவல் பெறப்பட்டது. நேற்றையதினம், பருவ மழை மேம்பட்ட காரணத்தினால் சிமிகோட் பகுதியில் உள்ள தமிழ்நாட்டைச் சேர்ந்த 18 யாத்ரீகர்கள் நேபால்கன்ச் என்ற இடத்திற்கு விமானம்மூலம் வந்தடைந்தனர். அங்கிருந்து யாத்ரீகர்களை தமிழ்நாட்டிற்கு உரிய முறையில் அனுப்பி வைப்பதற்கு புதுடெல்லியில் உள்ள தமிழ்நாடு இல்லத்திலிருந்து இரண்டு அதிகாரிகளை நேபால்கன்ச் என்ற இடத்திற்குச் செல்ல நான் உத்தரவிட்டேன். அவர்கள் இந்திய தூதரகம் மற்றும் நேபாள அரசின் ஒத்துழைப்போடு, நம் மாநிலத்தைச் சேர்ந்த அனைத்து யாத்ரீகர்களுக்குத் தேவையான உதவிகளையும் செய்து, அவர்களை தமிழ்நாட்டிற்குப் பாதுகாப்பாக அனுப்பி வைக்கத் தேவையான நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்கள். இக்குழுவைச் சேர்ந்த 18 பேர் இன்று காலை லக்னோவிற்கு வந்தடைந்துள்ளனர். இக்குழுவைச் சேர்ந்த மற்றொரு நபர் இன்று மாலைக்குள் லக்னோவை வந்தடைவார். இவர்கள் அனைவரும் இன்று இரவு சென்னையை வந்தடைவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கிருஷ்ணகிரி மாவட்டத்திலிருந்து நான்கு பேர் புனித யாத்திரைக்குச் சென்றுள்ளனர். அவர்கள் நேற்று சிமிகோட் பகுதிக்குத் திரும்பியுள்ளனர். அவர்களை நேபால்கன்ச் வழியாக இந்தியாவிற்கு அழைத்துவர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

முற்பகல் 11–20

இது தவிர, தேனி மாவட்டத்திலிருந்து தனியே புனித யாத்திரைக்குச் சென்ற 6 பேர் கொண்ட குழுவில், ஆண்டிப்பட்டியைச் சேர்ந்த 69 வயதான ஓய்வு பெற்ற தலைமையாசிரியர் திரு. ராமச்சந்திரன் என்பவர் புனித யாத்திரை செல்லும் வழியில் உடல்நிலை சரியில்லாத காரணத்தால் யாத்திரையை முடிக்க முடியாமல் திரும்பி வரும்போது மூச்சுத் திணறி இறந்ததாகத் தகவல் பெறப்பட்டது. தற்போது அவரது உடல் நேபாள தலைநகர் காட்மண்டுவில் உள்ள மருத்துவமனைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. தகவல் தெரிந்த அவரது மகனும், மகளும் அங்கே சென்றுள்ளனர். அன்னாரது உடலை இன்று அல்லது நாளைக்குள் அவரது சொந்த ஊருக்கு எடுத்துவர நேபாள நாட்டின் காட்மண்டுவில் உள்ள இந்திய தூதரகம் மூலமாக புதுடெல்லியிலுள்ள தமிழ்நாடு இல்ல அதிகாரிகள் துரித நடவடிக்கை எடுத்து வருகின்றனர். நேபாள நாட்டிற்கு தமிழ்நாட்டிலிருந்து சென்றுள்ள அனைத்து யாத்ரீகர்களும் பாதுகாப்பாக அவர்களது சொந்த ஊர் திரும்புவதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் அம்மா அவர்களுடைய அரசு எடுத்து வருகிறது என்பதைத் தங்கள் வாயிலாக எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) பல்கலைக்கழக மானியக் குழுவைக் கலைத்து மத்திய அரசு, தேசிய உயர் கல்விக் குழுவை அமைக்கத் திட்டமிட்டுள்ளதால் ஏற்பட்டுள்ள நிலை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்கலைக்கழக மானியக் குழுவை (U.G.C.) ஒழித்துவிட்டு உயர் கல்வி ஆணையத்தினை உருவாக்க மத்திய அரசு முடிவு செய்திருக்கிறது. இந்த ஆணையம் என்பது மாநில உரிமைகளுக்கும், மாநிலத்தில் இருக்கக்கூடிய பல்கலைக்கழகத்திற்கும், எந்த*